**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2023 ம் ஆண்டு ஜுன் மாதம் 13-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.756/2018

வா.சா.1 பழனிசாமி

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். எதற்காக எங்களுக்கு பங்கு இல்லை என்று சொல்கிறார்கள் என்றால் எங்களுக்கு பங்கு இல்லை என்று சொல்கிறார்கள். 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் நான்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அந்த ஆவணத்தை பார்த்தீர்களா என்றால் பார்த்துள்ளேன். அந்த ஆவணங்களின் நகல்களை சார் பதிவாளர் அலுவலகத்தில் வாங்கிப் பார்த்தோம். ராமாயம்மாள் கருப்பண்ண கவுண்டருக்கு விடுதலை ஆவணம் எழுதிக் கொடுத்ததாக தாக்கல் செய்துள்ளார்கள். பொங்கியம்மாள் என்பவர் என்னுடைய அம்மா. பொங்கியம்மாள் யாருக்கும் ஆவணம் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை. நான் 1957-ல் பிறந்தேன். பொங்கியம்மாள் 1945-ம் வருடம் ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்றால் அவ்வாறு ஆவணம் எழுதிக் கொடுக்கவில்லை. 2005-ம் வருட வாக்கில் எனது அம்மா பொங்கியம்மாள் 1945 ம் வருட வாக்கில் எந்த ஆவணமும் யாருக்கும் எழுதிக் கொடுக்கவில்லை என்று சொன்னார். தாவாச் சொத்து ஈஞ்சம்பள்ளி கிராமத்தில் உள்ளது, நாங்கள் பாசூர் வேங்கியம்பாளையத்தில் குடியிருந்து வருகிறோம். அப்புச்சி இறந்த சமயத்தில் பேச்சுவார்த்தை வந்த போது எனது தாயார் தாவாச் சொத்தில் 6-ல் நான்கு பாகம் இருப்பதாகச் சொன்னார். கருப்பண்ண கவுண்டர் 1985-ல் இறந்தார். அவர் இறப்பதற்கு எத்தனை வருடங்களுக்கு முன்பாக உயில் சாசனம் எழுதினார் என்றுத் தெரியாது. 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள நான்கு ஆவணங்களில் ஒரு ஆவணமான 4-வது ஆவணம் 16.02.1982 தேதியிட்ட கருப்பண்ண கவுண்டர் எழுதி வைத்த உயில் சாசனம் என்றால் தெரியாது. அந்த உயில் சாசனத்தின் நகலை வாங்கி படித்துப் பார்த்தோம். 1982-ம் வருடம் கருப்பண்ண கவுண்டர் உடல்நிலை சரியில்லாமல் இருந்து வந்தார்.

கருப்பண்ண கவுண்டர் 1982 ம் வருடம் உடல்நிலை சரியில்லாமல் இருந்து வந்தார் என்ற விபரம் வழக்குரையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 1935 ம் வருடம் கருப்பண்ண கவுண்டர் இரண்டாவது திருமணம் செய்த போது முதல் மனைவியின் சம்மத்தின் பேரிலும், முதல் மனைவி அவருக்குண்டான ஜீவனாம்சத்தை தொகையாக பெற்றுக் கொண்டு 18.06.1935 தேதியிட்ட விடுதலை ஆவணம் எழுதிக் கொடுத்த பிறகு தான் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்றால் ராமாயம்மாள் கருப்பண்ண கவுண்டருக்கு விடுதலை ஆவணம் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை, இந்த விபரத்தை ராமாயம்மாள் 1955 ம் வருடம் சொன்னார். கருப்பண்ண கவுண்டர் ராமாயம்மாள் விடுதலை கொடுத்த சமயத்திலேயே அவரது மகள் பொங்கியம்மாள் இளவராக இருந்த போது ரூ.250/-க்கு அடமானம் எழுதிக் கொடுத்தார் என்றால் அவ்வாறு அடமானம் எழுதிக் கொடுக்கவில்லை. பொங்கியம்மாள் 21.09.1945 தேதியில் அடமானத் தொகையை செலுத்தி அடமானத்தை ரத்து செய்தார் என்றால் சரியல்ல. அந்த ஆவணம் கொடுமுடி சார் பதிவகத்தில் ஆவண எண்.1384/1945 ஆக பதிவாகியுள்ளது என்றால் சரியல்ல. 16.02.1982-ல் கருப்பண்ண கவுண்டர் உயில் சாசனம் எழுதினார் என்றால் தாவாச் சொத்து கருப்பண்ண கவுண்டருக்கு பரம்பரைச் சொத்தாகும், அதனால் அவர் உயில் சாசனம் எழுதியிருந்தாலும் அது செல்லாது. அந்த உயில் சாசனம் அவரது மகன் சொங்கப்பனுக்கு எழுதிக் கொடுத்துள்ளார். சொங்கப்பன் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். சொங்கப்பன் இறந்துவிட்டதால் உயில் சாசனத்தின் சரத்துப்படி சொங்கப்பனின் சகோதரிகளான வள்ளியம்மாள் மற்றும் நாச்சாயம்மாள் ஆகியோர்களுக்கு சொத்து சென்றுவிட்டது என்றால் சரியல்ல, பரம்பரைச் சொத்தாகும். அந்த உயில் சாசனத்தில் பொங்கியம்மாளுக்கு எந்த சொத்தும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். கருப்பண்ண கவுண்டர் மூத்த தாரத்தை விடுதலை செய்து விட்டு, இரண்டாம் தாரம் திருமணம் செய்து கொண்டார் என்றும், அந்த காலத்தில் இரண்டாவது திருமணத்திற்கு தடை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. இரண்டாவது திருமணத்திற்கு அந்த காலத்திலேயே ராமாயம்மாள் எதிர்ப்பு தெரிவித்தார். ராமாயம்மாள் கருப்பண்ண கவுண்டரின் இரண்டாவது திருமணத்திற்கு எதிர்ப்பு தெரிவித்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் 21.09.1945 என்று தேதி உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் கண்டுள்ள

எழுத்துக்களை பொருத்து சாட்சிக்கு சரியாக பார்வை தெரியவில்லை என்பதால் மேற்கொண்டு ஆவணத்தை படிக்க முடியவில்லை என்று சொன்னார். அதே ஆவணத்தில் நடுப் பகுதியில் 18.06.1935 தேதி இருப்பதாக பார்த்து தெரிந்து கொண்டதாக தெரிவித்தார். எனக்கு பார்வை நன்றாகத் தெரியும் என்றும், எனக்கு தமிழ் நன்றாக படிக்கத் தெரியும் என்றும், வேண்டும் என்று ஆவணத்தை படிக்கக்கூடாது என்பதற்காக பார்வை தெரியவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராமாயம்மாள் விடுதலை கொடுத்துவிட்டதால் அவருக்கு எந்த உரிமையும் என்றும், அவரது மகள் பொங்கியம்மாளும் தொகையை பெற்றுக் கொண்டு விடுதலை கொடுத்துவிட்டதால் அவருக்கும் எந்தவிதமான உரிமையும் இல்லை என்றும், அதனால் நாங்கள் எந்த உரிமையும் கோர முடியாது என்றும், கருப்பண்ண கவுண்டர் எழுதிக் கொடுத்த உயில் சாசனத்தின்படி தாவாச் சொத்தானது வள்ளியம்மாள், நாச்சம்மாள் ஆகியோர்கள் அடைந்து அவர்களது சுவாதீனத்திற்கு சென்றுவிட்டதால் தாவாச் சொத்தில் எங்களுக்கு எவ்விதமான உரிமை பாத்தியமும் இல்லை என்றும் வள்ளியம்மாள் மற்றும நாச்சம்மாள் வாரிசுகள் சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொண்டு அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். வள்ளியம்மாள் மற்றும் நாச்சம்மாள் வாரிசுகளுகள் தான் சொத்துக்களை அபிவிருத்தி செய்து அரசுக்கு செலுத்த வேண்டிய வரி வகையறாக்களை செலுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. சொத்துக்களை கூட்டாகத் தான் அனுபவித்து வருகிறோம். இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை நாங்கள் எல்லோரும் கூட்டுக்குடும்பாகத் தான் இருந்து வந்தோம். என் அப்பா பெயர் செல்லப்ப கவுண்டர், அவருக்கு சொந்த ஊர் வேங்கியம்பாளையம் ஆகும். நாங்கள் எங்கு குடியிருந்தோம் என்றால் வேங்கியம்பாளைத்திலும், தாவாச் சொத்திலும் மாறி, மாறி இருந்து வந்தோம். 1982 ம் வருடத்திய உயில் சாசனத்தில் கண்டுள்ள சாட்சிகள் தங்கமுத்து கவுண்டர் மற்றும் பழனியப்ப கவுண்டர் ஆகியோர்கள் யார் என்றுத் தெரியாது. எனக்கோ, இதர வாதிகளுக்கோ மற்றவர்களுக்கோ தாவாச் சொத்தில் எந்தவிதமான உரிமையோ, பாத்தியமோ இல்லை என்றால் சரியல்ல.

**4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**